**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 96/2025**

**Prosecution witness : அ.சா. 8** **Date : 06.11.2025.**

| | |
|---|---|
| **Name : வேலு** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் காமனேரியில் குடியிருந்து பொட்டனேரி பெட்ரோல் பங்கில் வேலை செய்கிறேன். கடந்த 2023 ம் வருடம் மாலை நேரத்தில் நான் பெட்ரோல் பங்கில் வேலை செய்த போது இரு சக்கர வாகனத்தில் வந்த நபர் மீது டேங்கர் லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். நான் வெளியே வந்து பார்த்து விபத்து பற்றி தெரிந்து கொண்டேன். வேறு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 15.10.2023 ம் தேதி மதியம் 03.15 மணிக்கு நான் பெட்ரோல் அடித்து கொண்டு இருந்த போது TN 38 AB 8645 பஜாஜ் சிடி 100 வாகனம் பொட்டனேரி டு மேட்டூர் ரோட்டில் பொட்டனேரி பக்கமிருந்து பெட்ரோல் போட பங்க் எதிரில் வந்தார் என்றால் எனக்கு தெரியாது. அப்போது ரோட்டை கடக்க சைகை செய்து

தெற்கிலிருந்து வடக்கு நோக்கி கடந்து வந்த போது மேச்சேரி நோக்கி மேற்கிலிருந்து கிழக்காக TN 52 X 0360 டேங்கர் லாரியை அதிவேகமாக ஓட்டி வந்து மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் எனக்கு தெரியாது. சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**